செ.வெ.எண். 26 நாள் - 15.10.2020

# நீலகிரி மாவட்டத்தில் வேலைவாய்ப்பற்றோர் மாற்றுத்திறனாளி இளைஞர்களுக்கான உதவித் தொகைதிட்டத்தின் மூலம் உதவித்தொகை பெற விண்ணப்பிக்கலாம் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தகவல்

---

தமிழகஅரசின் மாற்றுத்திறனாளிகள் வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் சென்ற காலாண்டு வரை 198 பதிவுதாரர்கள் பயன் பெற்றுவருகின்றனர்.

இத்திட்டத்தின்படி பதிவுதாரர்களுக்கு அவர் தம் கல்வித்தகுதி அடிப்படையில் கீழ்காணுமாறு உதவித்தொகைவழங்கப்பட்டுவருகிது.

| | | |
|---|---|---|
| பத்தாம் வகுப்புதேர்ச்சிமற்றும் அதற்குகீழ் தேர்ச்சிபெற்றவர்களுக்கு | : | மாதம் ரூ.600.00 |
| பள்ளி இறுதிவகுப்பில் தேர்ச்சி/அதற்குசமமான | : | மாதம் ரூ. 750.00 |
| பட்டதாரிகள்/முதுநிலைப் பட்டதாரிகளுக்கு | : | மாதம் ரூ. 1000.00 |

இந்தஉதவித்தொகையைப் பெறுவதற்கு கீழ் குறிப்பிட்டுள்ள தகுதிகொண்ட பதிவுதாரர்கள் வேலைவாய்ப்பகத்திற்கு நேரில் வந்து விண்ணப்பங்களை பெற்று விண்ணப்பிக்கலாம்.

வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவுசெய்து ஓராண்டு நிறைவு செய்திருக்க வேண்டும். வருமான உச்சவரம்பு ஏதும் இல்லை. இந்த பயனாளிகளுக்கு பத்து ஆண்டுகள் தொடர்ந்து உதவித் தொகை வழங்கப்படும்.

மாற்றுத்திறனாளி என்ற முன்னுரிமையினை வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்திருக்க வேண்டும். விண்ணப்பதாரர் எந்தவொரு கல்வி நிறுவனத்திலும் முழுநேர மாணவராக இருக்கக் கூடாது.

விண்ணப்பதாரர் அரசு/தனியார் துறையிலோஅல்லது சுய வேலைவாய்ப்பிலோ ஈடுபடுபவராகஇருத்தல் கூடாது. விண்ணப்பதாரர் பள்ளிஅல்லதுகல்லூரிகல்வியினைமுழுவதுமாகதமிழ்நாட்டில் முடித்திருக்கவேண்டும். அல்லது/பெற்றோர்/கணவர்/மனைவி/பாதுகாவலர் குறைந்தபட்வம் 15 ஆண்டுகள் தமிழ்நாட்டில் குடியிருத்தல் வேண்டும்.

நீலகிரிமாவட்டத்திருள்ளதேசியமயமாக்கபட்டஏதேனும் ஒருவங்கியின் கிளையில் சேமிப்புகணக்கு ( Savings Bank Account ) மற்றும் கணக்குஎண் (Account Number) வைத்திருக்கவேண்டும்.

எனவே தகுதியுள்ள மாற்றுத்திறனாளிகள், இதுவரை விண்ணப்பம் பெறாதவர்கள் உடனடியாக விண்ணபத்தினை பெற்று முழு நேரவிவரங்களை பூர்த்தி செய்து மாவட்ட வேலைவாய்ப்புமற்றும் தொழில்நெறிவழிகாட்டும் அலுவலகத்தில் கொடுத்து அரசுவழங்கும் மாற்றுத்திறாளிகளுக்கான வேலைவாய்ப்பற்றோர் உதவித்தொகையினை தவறாது பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்ளப்படுகிறது.

மேலும் விவரங்களுக்கு அலுவலகதொலைபேசிஎண். 0423 -2444004, 0423-2223346.என்ற எண்ணிற்கு தொடர்புக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இன்னசென்ட் திவ்யா இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நீலகிரி மாவட்டம்